# ஜப்பானுக்கான பிரதமரின் சிறப்பு தூதர் டாக்டர் அஷ்வனி குமாரின் டோக்கியோ விஜயம்

செப்டம்பர் 19, 2013

சிவில் அணு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தம் விரைவாக நிறைவேற்றுவது தொடர்பாக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளை இந்தியாவும் ஜப்பானும் முன்னெட்டி கொண்டு செல்லும் என்று பிரதமரின் சிறப்புத் தூதர் டாக்டர் அஷ்வனி குமார், ஜப்பானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஃபுமியோ கிஷிடா ஆகியோருக்கிடையே டோக்கியோ நகரில் இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது முடிவு செய்யப்பட்டது. ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் இது பற்றி தெரிவிக்கையில், இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் மக்களின் ஒத்துழைப்புடன் விரைவில் நிறைவு பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஃபுமியோ கிஷிடாவுடன் நடத்திய இந்த சந்திப்பின் போது, இந்தியா ஜப்பான் இடையேயான தளத்தகை மற்றும் உலகளாவிய கூட்டாண்மை குறித்த உயர்மட்ட அளவிலான திறனாய்வினை மேற்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. ஜப்பானின் மன்னரும் ராணியும் இந்தியா வருகை புரிவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஜப்பான் பிரதமர் ஆபே வருடாந்திர மாநாட்டில் பங்கேற்க இந்தியா வருவதற்காக இரு நாடுகளும் ஏற்பாடுகளைச் செய்து வரும் சூழலில் இந்த திறனாய்வு நடைபெற்றது. இரு நாடுகளுக்கும் இடையேயான தனித்தன்மை வாய்ந்த பன்முகத் திறன் சார்ந்த உறவினை மேலும் ஆழப்படுத்தும் வகையில் முழு ஆதரவினையும் வழங்க இரு நாட்டுத் தலைவர்களும் சம்மதித்தனர். இந்தியா ஜப்பான் இடையேயான நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பு ஆசியாவின் தொடர் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமையும் என்று இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. இது தொடர்பாக அவர்கள் சமீபத்தில் முடிவு செய்யப்பட்ட 50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இருதரப்பு நாணய பரிமாற்றம் குறித்து வரவேற்றனர். தில்லி மும்பை சரக்கு பாதை மற்றும் தில்லி மும்பை தொழிற்துறை பாதை திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், அதிவேக ரெயில் பாதையை இந்தியாவில் அறிமுகம் செய்வது தொடர்பாகவும் விவாதிக்கப்படுவதை வரவேற்றனர். கடல் சார் பாதுகாப்பு, கடல்

கொள்ளை தடுப்பு மற்றும் பயங்கரவாதம் தடுப்பு உள்ளிட்ட இரு தரப்பு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான முன்னேற்றங்கள் குறித்தும் டாக்டர் குமார் கூட்டத்தில் விவாதித்தார்.

டோக்கியோவில் உயர் மட்ட அளவிலான பணிகளில் தொடர்ந்து பங்கேற்று வரும் டாக்டர் குமார், நேற்று பிரதமர் ஆபேவை சந்தித்தார். மேலும் வெளியுறவு விவகாரங்கள் குழு தலைவர் கட்சுயூகி கவாய், தலைமையிலான ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் சந்தித்தார். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 2013 ஆகஸ்ட் மாதம் இந்தியாவிற்கு வருகை புரிந்திருந்தனர். அவர்களை டாக்டர் அஷ்வனி குமார் வரவேற்றிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர்கள், இந்தியா வந்த போது அவர்களுக்கு தில்லி, மும்பை மற்றும் பெங்களூருவில் செய்திருந்த ஏற்பாடுகள் குறித்து பாராட்டுக்களை தெரிவித்தனர். துடிப்பான இந்திய சந்தையில் மேன்மேலும் ஜப்பானிய நிறுவனங்கள் பங்கேற்க வேண்டும் என்று டாக்டர் அஷ்வனி வலியுறுத்தினார். இந்தியாவில் கட்டமைப்புத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் டி.எப்.சி. மற்றும் டி.எம்.ஐ.சி. திட்டப்பணிகளின் பலனை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார். இது தொடர்பாக, தேவையான இரு தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தங்களை குறிப்பாக, சமூக பாதுகாப்பு உள்ளிட்டவற்றை விரிவு படுத்த வேண்டியதன் தேவையை இரு தரப்பும் ஏற்றுக்கொண்டன. இதன் மூலம் மற்றவர்களின் நாடுகளில் பணிபுரியும் ஜப்பான் மற்றும் இந்திய நிறுவனங்கள் பெரிதும் பயன்பெறும்.

ஜப்பானுடன் உயர்மட்ட அளவிலான பரிமாற்றங்களின் விறுவிறுப்பினை தக்க வைக்கும் வகையிலும், ஜப்பானின் மன்னர் மற்றும் ராணி மற்றும் ஜப்பான் பிரதமர் இந்தியா வருகை புரிவது தொடர்பான ஏற்பாடுகளை செய்ய, பிரதமரின் சிறப்புத் தூதர் என்ற அந்தஸ்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்ற ஜப்பானுக்கு 3 நாள் பயணமாக டோக்கியோ நகருக்கு விஜயம் செய்த டாக்டர் அஷ்வனி குமார் இன்று தனது சுற்றுப்பயணத்தை நிறைவு செய்கிறார்.